செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 21.01.2021

# செய்தி வெளியீடு

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை2013=100): திசம்பர்2020**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk

2020 திசம்பர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம்(பதில்), தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறு முதன்மைப் பணவீக்கமானது 4.6% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2020 நவம்பர் மாதம் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 5.2% ஆக இருந்தது. 2020 திசம்பர் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புகள் முறையே 3.4%, 1.2% ஆக காணப்படுகின்றன. அதேவேளை, 6.2% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2019 திசம்பர் மாதத்தில் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பங்களிப்புகள் முறையே 3.8%, 2.4% ஆக காணப்பட்டன. 2019 திசம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், உணவுப் பிரிவில் அதிகரித்த சதவீதம் பதிவாகியமைக்கான பிரதான காரணம், 2020 திசம்பர் மாதத்தில் நிலவிய உயர்வான விலை மட்டங்களே குறிப்பாக தேங்காய், மஞ்சள்தூள், தேங்காய் எண்ணெய், மைசூர் பருப்பு, பெரிய வெங்காயம், மிளகாய்த்தூள் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் அதிகரித்த விலைகளாகும்.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2020 நவம்பர் மாதத்தில் பதிவாகிய 139.8 இருந்து 2020 திசம்பர் மாதத்தில் 141.2 ஆக அதிகரித்துள்ளது. இது, 2020 நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 1.4 சுட்டெண் புள்ளிகள் அல்லது 1.0 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 1.02% இனாலும் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 0.01% இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்புக்கள் தேங்காய், மரக்கறி, உருளைக்கிழங்கு, அரிசி, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், முட்டை, எலுமிச்சம்பழம், மைசூர் பருப்பு, புதிய மீன், பெரிய வெங்காயம், கருவாடு, புளியம்பழம், மிளகாய்த்தூள், பாசிப்பயறு, தேங்காய் எண்ணெய், செத்தல் மிளகாய் மற்றும் ரின் மீன் என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் குறைந்த சுட்டெண் பெறுமதிகள் சீனி மற்றும் புதிய பழங்கள் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 திசம்பர் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதியின் அதிகரிப்புக்கு பிரதான காரணம், 'போக்குவரத்து' (பஸ் கட்டணம்) மற்றும் 'சுகாதாரம்' ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்கள் ஆகும். மேலும், 'ஆடையும் காலணியும்' மற்றும் 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்' ஆகிய பிரிவுகள் பொருட்டு சற்று விலை அதிகரிப்புக்கள் பதிவாகின. எனினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில், 'அற்ககோல் பானங்கள், புகையிலை & தியக்க மருந்துகள்'(பாக்கு) பிரிவு பொருட்டு விலை குறைவு பதிவாகியதுடன் 'தளபாடம், குடித்தன உபகரணம் & வழமையான குடித்தன பராமரிப்பு' பிரிவு பொருட்டும் சற்று விலை குறைவு பதிவாகியது. அதேநேரம், 'வீடமைப்பு,நீர்,மின்வலு,எரிவாயு,ஏனைய எரிபொருள்கள்', 'தொடர்பாடல்', 'பொழுதுபோக்கும் கலாசாரமும்', 'கல்வி' மற்றும் 'உணவகமும் ஹோட்டல்களும்' ஆகிய பிரிவுகளின் விலைச் சுட்டெண்கள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.

2020 திசம்பர் மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2020 நவம்பர் மாதத்தில் பதிவாகிய 4.5% இருந்து 4.7% வரை அதிகரித்துள்ளது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) |
| **2019** | டிசம்பர் | 135.0 | 134.2 | 1.6 | -0.3 | 6.2 | 5.2 |
| **2020** | ஜனவரி | 137.0 | 135.3 | 1.5 | 0.8 | 7.6 | 3.9 |
| | பெப்ரவரி | 137.0 | 135.8 | 0.0 | 0.4 | 8.1 | 3.4 |
| | மார்ச் | 135.2 | 136.0 | -1.3 | 0.1 | 7.0 | 3.2 |
| | ஏப்ரல் | 134.8 | 136.9 | -0.3 | 0.7 | 5.9 | 3.2 |
| | மே | 135.4 | 137.9 | 0.4 | 0.7 | 5.2 | 3.7 |
| | யூன் | 137.3 | 138.9 | 1.4 | 0.7 | 6.3 | 4.4 |
| | யூலை | 137.3 | 139.4 | 0.0 | 0.4 | 6.1 | 4.5 |
| | ஓகஸ்ட் | 137.8 | 139.9 | 0.4 | 0.4 | 6.2 | 4.6 |
| | செப்ரெம்பர் | 138.9 | 140.4 | 0.8 | 0.4 | 6.4 | 4.8 |
| | ஒக்ரோபர் | 139.1 | 140.5 | 0.1 | 0.1 | 5.5 | 4.5 |
| | நவம்பர் | 139.8 | 140.6 | 0.5 | 0.1 | 5.2 | 4.5 |
| | டிசம்பர் | 141.2 | 140.5 | 1.0 | -0.1 | 4.6 | 4.7 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்